Ti Nb Ir Ta Ru Pt

# Ti Anode Fabricators Pvt. Ltd.

Tiaano® Innovation In Inert Metals — 23 YEARS Since 1992

# 48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: +91 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com Web: www.tianode.com

## "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

### GOAL 2015-2016

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 156% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

### TESTIMONIALS

- **Customers…**
  - Up to May 15 : 859 Nos.
  - Up to Apr. 15 : 850 Nos.
- **Performance May 15 …**
  - Turnover growth : 1.78%
  - Employment growth : -0.56%
  - 100% Attendance : 10%

### MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

### OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Treatment Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Equipments.
- HydroGen Go Green – HHO Generators
- Titanictrade (We Deliver Value Chain) – Portal for Exotic Metals
- – Tiaano Vidyashrm (CBSE Pattern School)




### நன்றி நவில்

வேடன் விரித்திருந்த வலையில் கழுகு ஒன்று சிக்கிக் கொண்டது. அதைப் பிடித்த வேடன், சிறகுகளை மட்டும் வெட்டி சங்கிலியால் கட்டி போட்டிருந்தான். அவ்வழியே சென்ற பெரியவர் ஒருவர், அதன் மீது இரக்கம் கொண்டார். வேடனிடம் காசு கொடுத்து அந்தக் கழுகை விலைக்கு வாங்கி, தன் வீட்டிற்குக் கொண்டு சென்று அன்புடன் வளர்த்தார்.

இறக்கைகள் நன்கு வளர்ந்ததும் அதை பறந்து போக அனுமதித்தார். கழுகு பறந்து செல்லும்போது அதன் பார்வையில் ஒரு முயல் தென்பட்டது. அதை அப்படியே தூக்கி வந்து தன்னை வளர்த்த பெரியவரிடம் பரிசாக கொடுத்தது.

இதை கவனித்துக் கொண்டிருந்த நரி, "ஏற்கனவே உன்னை பிடித்த வேடன் மறுபடியும் பிடிக்கலாம். இந்த முயலை அவனிடம் கொடுத்திருந்தால், மறுபடியும் அவன் உன்னை பிடிக்காமல் இருப்பான். பெரியவருக்கு முயலைக் கொடுத்தாலும், கொடுக்காமல் இருந்தாலும் அவர் உன்னை பிடிக்க வரபோவதில்லை. எதற்காக அப்படிச் செய்தாய் என கழுகை பார்த்துக் கேட்டது.

அது தவறு! வேடனிடம் நான் முயலைக் கொடுத்தாலும், பிற்காலத்தில் அவன் என்னை வலைவிரித்து பிடிக்கலாம். ஆனால் நான் ஆபத்தில் இருந்த போது என்னை பெரியவர் காப்பாற்றினார். அவரிடம் நான் கொண்டுள்ள நன்றியை வெளிப்படுத்தவே முயலைப் பரிசாக செலுத்தினேன். உதவி செய்தவரிடம் நன்றியோடு இருப்பது தான் பண்புள்ள செயல் என பதில் கூறியது கழுகு.

ஆபத்துக் காலங்களில் உதவி செய்தவர்களை மறக்காமல் நன்றியோடு இருப்பது தான் நல்லவர்களுக்கு அழகு.

Compiled by Ms. P. E. Nancy
Director - Admin

### உலக அமைதிக்கான 14 வழிகள்

போரில்லா நல்லுலகம், பொருள்துறையில் சமநீதி,

நேர்மையான நீதிமுறை, நிலவுலகுக்கோர் ஆட்சி,

சீர்செய்த பண்பாடு, சிந்தனையோர் வழிவாழ்வு,

சிறப்புணர்ந்த பெண்மதிப்பு, தெய்வநீதி வழிவாழ்தல்,

தேர்திருவிழா தவிர்த்தல், சிறுவர்களுக்கே விளையாட்டு,

செயல்விளைவு உணர்கல்வி, சீர்காந்த நிலைவிளக்கம்,

பார் முழுதும் உணவுநீர் பொதுவாக்கல், பல கடவுள்

பல சமயம் ஒழித்துண்மை ஒன்றை வழிபடுதல்.

Compiled by Mr. V. Azhakesan
Customer Care

## FUNCTIONAL WISHES



**KAMARAJAR BIRTHDAY**
**15th JULY**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital<br>Tel: 22294565 |
| | : M/s. Jeya Clinic<br>Tel: 098408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | |
|---|---|
| **Mrs. S. MARAGATHAM**<br>Coating | **05th Jul.** |
| **Mr. BB. RUBEN SONAR**<br>Project | **06th Jul.** |
| **Mr. M. DURAI**<br>Production | **08th Jul.** |
| **Mrs. S. B. KOHILA**<br>Quality Control | **10th Jul.** |
| **Mrs. G. KALAIVANI**<br>Facilitation | **19th Jul.** |
| **Mrs. M. ALAMELU**<br>Administration | **22nd Jul.** |
| **Mr. P. ARUMUGAM**<br>Design | **24th Jul.** |
| **Mr. R. NAGAN**<br>Quality Control | **24th Jul.** |
| **Mr. M. SATHIYASEELAN**<br>Purchase | **29th Jul.** |
| **Mr. S. THARMA ARASU**<br>Finance | **31st Jul.** |

**Best Wishes from Tiaano Employees**

உயிரே போகும் நிலை வந்தாலும்
தைரியத்தை விடாதே!
நீ சாதிக்கப் பிறந்தவன்!
துணிந்து நில்,



**— சுவாமி விவேகானந்தர்**

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

சிங்கமும் சிறுத்தையும் ஒரே இடத்தில் நீர் பருக வந்தன. யார் முதலில் நீர் பருக வேண்டும் என்பதில் இருவருக்கும் வாக்குவாதம். விட்டுக் கொடுப்பதைவிட யுத்தமிட்டுச் செத்துப் போகலாம் என்று முடிவு செய்து இரு விலங்குகளும் மோதிக் கொள்ளத் தொடங்கின.

மல்லாந்து விழுந்த சிறுத்தை, "அங்கே பார்" என்று அலறியது. சிங்கமும் சண்டையை நிறுத்தியது. தலையை உயர்த்தியது. அங்கே வல்லூறுகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. வீணாக சண்டையிட்டுக் கொண்டதால் தங்கள் வீழ்ச்சியை விருந்தாக்கிக் கொள்ள பலரும் காத்திருப்பது புரிந்தது. சிங்கத்திற்கும் சிறுத்தைக்கும் ஞானம் பிறந்தது.

வீண் சண்டைகள் எதற்கு? வேலைகள் உள்ளன நமக்கு!

—கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலீருந்து தொகுக்கப்பட்டது

## சொர்க்கம் எது? நரகம் எது?

ஒரு மரத்தின் அடியில் அமைதியாக அமர்ந்திருந்தார் ஜென் குரு. அப்போது அந்த வழியாக ஒரு வீரன் குதிரையில் சென்று கொண்டிருந்தான். அமைதியாக வீற்றிருக்கும் துறவியைக் கண்டதும், அவன் குதிரையில் இருந்து இறங்கி அவரை நோக்கி வந்தான். பின்னர் அவர் அருகே வந்து கைக்கூப்பி வணங்கி நின்றான். சிறிது நேரம் கழித்து குரு தனது கண்களைத் திறந்து, அவனை ஊடுருவிப் பார்த்தாரே தவிர, அவனிடம் எதுவும் பேசவில்லை. ஆனால் அவன் பேசினான். 'குருவே! எனக்கு நெடுநாளாக ஒரு சந்தேகம் இருக்கிறது. அதற்கு தகுந்த விடையை தாங்கள் தான் கூறவேண்டும்' என்றான். அப்போதும் குருவானவர் எதுவும் பேசவில்லை. மீண்டும் அந்த வீரனே பேச்சைத் தொடர்ந்தான். 'சுவாமி! சொர்க்கம், நரகம் என்றெல்லாம் பலரும் சொல்லக் கேள்விப்பட்டு இருக்கிறேன். இவை இரண்டும் உண்மையிலேயே இருக்கின்றனவா? அப்படியிருப்பின் அவை எங்கே இருக்கின்றன? என்று தன் சந்தேகத்தை அந்த குருவின் முன்பாக வைத்தான்.

இப்போதும் ஜென் குரு அமைதியாகவே இருந்தார். எந்த பதிலும் சொல்லவில்லை. ஆனால் அந்த வீரனோ, பதில் கிடைக்காமல் இங்கிருந்து போகமாட்டேன் என்பது போல் அங்கேயே நெடு நேரமாக அமர்ந்திருந்தான், குருவின் முகத்தைப் பார்த்தபடியே, குருவானவர் இப்போது அந்த வீரனை தீர்க்கமாக பார்த்தார்.

சிறிது நேரம் கழித்து அவனிடம் ஒரு கேள்வியைக் கேட்டார். 'நீ என்ன பணி செய்து கொண்டிருக்கிறாய்? அதற்கு அந்த வீரன், 'குருவே! நான் இந்த நாட்டின் தளபதி. எல்லா படை வீரர்களுக்கும் பிரதான சேனாதிபதியாக இருக்கிறேன்' என்று பெருமையுடன் கூறினான். குருவிடம் இருந்து ஒரு கேலி சிரிப்பு வெளிப்பட்டது. அவர் வீரனைப் பார்த்து, 'நீ ஒரு முழு முட்டாள். உன்னை போன்ற மடையனை எல்லாம் எவன் சேனாதிபதியாக நியமித்தான்?' என்று கேட்டு விட்டு மறுபடியும் கேலியாகச் சிரித்தார்.

வீரனுக்கு வந்ததே கோபம். கண்களின் நெருப்பு பொறி பறக்க, 'ஏய்! என்ன சொன்னாய்?' என்று ஆவேசம் பொங்க கர்ஜித்தபடி, தன் உறையில் இருந்து வாளை வேகமாக உருவினான். இதனைக் கண்ட குரு, 'இதோ நரகத்தின் கதவுகள் திறக்கின்றன' என்றார். தன் சிரிப்பை

## தெரிந்து கொள்வோம்

**குமரி மாவட்டம் குறித்து சில தகவல் துளிகள்ஹ**

- இந்திய நாட்டின் தெற்கு முனை — முக்கடலும் சங்கமிக்கும் குமரிமுனை அமைந்துள்ள மாவட்டம்.
- தமிழகத்தில் எழுத்தறிவில் முதலிடம் வசிக்கும் மாவட்டம்.
- பரப்பளவில் குறைந்ததெனினும், மலைகளும் கடலும் சூழ்ந்த இயற்கை எழில் கொஞ்சும், தென்னை, வாழை நிறைந்த மாவட்டம்.
- 'ஆசிரியர் மாவட்டம்' என்று சொல்லுமளவுக்கு தமிழகம் முழுவதும் பரவலாக ஆசிரியர்களை அனுப்பி வைத்த மாவட்டம்.
- இந்தியாவின் உயர்தர ரப்பர் விளையும் மாவட்டம்.
- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, 'தமிழ்த்தாய் வாழ்த்து' தந்த மனோன்மணியம் சுந்தரனார் பிறந்த மாவட்டம்.
- கலைவாணர் N.S. கிருஷ்ணன், திரையிசைத் திலகம் K.V. மகாதேவன், அவ்வை சண்முகம் போன்ற கலையுலக ஜாம்பவான்களின் சொந்த மாவட்டம்.
- சொந்த ஊரில் தோற்கடிக்கப்பட்ட பெருந்தலைவர் காமராசர், உச்சி முகர்ந்து பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைத்த பெருந்தலைவரின் செல்ல மாவட்டம்.
- சமீபத்தில் இந்தியாவிலேயே சுத்தமான பஞ்சாயத்து யூனியன்(மேல்ப்புறம்) என்ற ஜனாதிபதி விருதினை தட்டிச்சென்று, தமிழகத்துக்கு பெருமை சேர்த்த மாவட்டம்.
- இந்தியாவிலேயே முதல் பெண் பேருந்து ஓட்டுனரை தந்த மாவட்டம்.
- தமிழகத்தில் அதிகமாக காற்றாலை மூலம் மின் உற்பத்தி நடைபெறும் மாவட்டம்.
- தமிழகத்தில் மாவட்ட தலைநகரின் பெயரில் அழைக்கப்படாத மாவட்டம் (மாவட்ட தலைநகர் — நாகர்கோவில்).

Collected from Internet

நிறுத்தாமல், அதைக் கேட்டு ஒரு நிமிடம் திகைத்து நின்றான் வீரன். அவனுக்கு ஏதோ விளங்குவது போல் இருந்தது. சட்டென்று வாளை உறையில் போட்டு விட்டு, கைகளைக் கூப்பி குருவை வணங்கியபடி 'மன்னிக்க வேண்டும் குருவே!' என்றான் பணிவுடன். 'இதோ சொர்க்கத்தின் கதவுகள் திறந்து விட்டன' என்றார் குரு மீண்டும் புன்சிரிப்புடன். சொர்க்கமும், நரகமும் நம்மில் தான் இருக்கின்றன. ஒருவன் கோபத்தைக் கையாளும் போது தனக்குள் இருக்கும் நரகத்தை நோக்கி நடைபோடுகிறான். அன்பையும், அமைதியையும் வெளிப்படுத்தும்போது தனக்குள் இருக்கும் சொர்க்கத்தை நோக்கி பயணப்படுகிறான்.

### தானம் செய்யுங்கள்

ஒரு ஏழை விவசாயி தனது குடும்பத்துக்குப் போக, மீதி காய்கறிகளை தானமாக வழங்கி வந்தான். இது அவனது மனைவிக்கு பிடிக்கவில்லை. மீதி காய்கறியை விற்றால், பணம் கிடைக்குமே! கஷ்ட நிலை தீருமே! என்றாள். அவன் மனைவியிடம், தானம் செய்வது நமது சாஸ்திரம் வகுத்த விதி. எல்லாவற்றையும் நாமே தின்று விட்டால், எப்படி மோட்சத்தை அடைவதாம்! இந்தப் பிறவிக் கடலுக்குள்ளே தானே கிடந்து உழலவேண்டும், என்று பதில் சொன்னான். அவளுக்கு புரிந்தும் புரியாத மாதிரி இருந்தது. அதற்கு மேல், அவளால் அவனைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அடுத்த பிறவியில், அந்த விவசாயி, தன் தர்மத்தின் பலனாய் அரசனாகப் பிறந்தான். அவனுக்கு முற்பிறவியில் வாய்த்த மனைவியே அமைந்தாள். ஒரு முறை, அவளுக்கு முன்ஜென்ம நினைவு வந்தது. அந்த அடிப்படையில், நீங்கள் போன பிறவியில் காய்கறி தானம் செய்ததால், அரசனாகப் பிறந்தீர்கள்! இந்தப்பிறவியிலும் அதையே செய்யலாமே! ஏன்றாள்.

அவள் சொன்னதற்கு காரணம் பேராசை. அடுத்த பிறவியில், இதைவிட வசதியாக வாழலாம் என்று நினைத்தாள். அரசனும் அப்படியே செய்தான். ஆனால், அரசனும், அரசியும் இறந்து மீண்டும் ஏழையாகவே பிறந்தார்கள்.

ஒரு துறவியிடம் தங்கள் நிலை பற்றி சொன்னார்கள், மகனே! ஏழையாய் இருந்த போது காய்கறி தானம் செய்தது சரியே! அரசனாய் இருந்த போது, உன் வசதிற்கேற்ப தங்கமும், வைரமுமாய் தானம் செய்திருக்கலாமே!

தனக்குப் போக எஞ்சியது எதுவாயினும் தானம் செய்பவனே ஒவ்வொரு பிறவியிலும் உயர்கதியை அடைய முடியும் என்றார்.

Compiled By : Mrs. R. Gayathri
Receptionist

### நம்பித்தான் ஆகவேண்டும்
### 5S (தொடர்ச்சி XXXXII)

**காட்சியும் கட்டுப்பாடும்**

இப்படி எல்லாப் பொருள்களையும் வகைப்படுத்திய பிறகு, ஒரே பிரிவில் உள்ள பொருள்களை, அதாவது ஒரே நிற ரிப்பன் கட்டப்பட்டிருக்கும் பொருள்களையெல்லாம் ஒரே இடத்தில் சேமித்து வைக்கவேண்டும்.

**கவிதைகள்**

**பாசம்**

தந்தையின் பாசம்
வளரும் வரை
தாயின் பாசம்
திருமணம் வரை
சகோதரர்கள், நண்பர்களின் பாசம்
அவர்களுக்கென்று
தனியாக வாழ்க்கை வரும் வரை
பிள்ளைகளின் பாசம்
அவர்கள் உலகம் அறியும் வரை
ஆனால் கணவன் மனைவி பாசமோ
"நீங்கள் இறப்பதற்கு ஒரு நொடிக்கு
முன் நான் கண் மூடிட வேண்டும்"
என்று கூறும்
மனைவி பாசம்,
"நான் இறந்த அடுத்த நொடி
நீயும் என்னுடன் வந்து விடு"
எனக்கூறும்
கணவனின் பாசமும்
வேறு எந்த பாசத்திற்கும் ஈடாகாது.

Compiled By : Mrs. C. Bavani
Administration

**வாழ்க வையகம் வாழ்க வளமுடன்**

**எண்ணத்தின் சிறப்பு**

எண்ணத்தை எண்ணத்தால் எண்ணி எண்ணி
எண்ணத்தின் இருப்பிடமும் இயல்பும் கண்டு
எண்ணத்தை எண்ணத்தில் நிலைக்கச் செய்தால்
எண்ணமே பழக்கத்தால் தெளிந்து போகும்
எழும் எண்ணம் எங்கிருந்து எழுகின்றது
என்று ஆராய்ந்தால்
எண்ணமே எண்ணத்தில் அடங்கி விடும்.

**சிந்தனைக்கு**

முன்னேற்றம் வேண்டுமானால் முதலில் நம்மிடமும் பின்னர் இறைவனிடமும் நம்பிக்கை வைக்க வேண்டும்.

Compiled By : Mrs. R. Jayanthi
Purchase

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

உதாரணமாக – நமது ஓவியர் தனது பிரஷ்களை ஸ்டுடியோ முழுவதும் இறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் ஒரு குறிப்பிட்ட மேஜையின் மீது வரிசைப்படி அடுக்கி வைத்தால், தேவைப்படும் நேரத்தில் சட்டென்று வேண்டியதைத் தேடி எடுத்துக் கொள்ளலாம். இதேப் போல், வர்ணங்கள் எல்லாவற்றையும் ஓர் அலமாரியில் சேமித்து வைக்கலாம். வரைந்து முடித்த ஓவியங்களை வேறொரு பாதுகாப்பான அறைக்கு இடம் மாற்றலாம்.

பேருந்து ரயில் நிலையங்களோடு ஒப்பிடுகையில் நமக்கு விமான நிலையங்கள் அதிக வசதியாகத் தோன்றுவதன் காரணம் இதுதான். அங்கே கிடைக்கிற எல்லாவற்றையும், தெளிவாக வகைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். எப்போதாவது விமான நிலையத்தினுள் எட்டி பார்க்கிற நமக்குக் கூட எல்லா விவரங்களும் தெளிவாகக் கிடைக்கின்றன.

முதலாவதாக உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகளுக்கு இரண்டு தனித்தனி வாசல்கள் இருக்கின்றன. காரணம், வெளிநாட்டுப் பயணிகளுக்க கஷ்டம்ஸ் பாதுகாப்புச் சோதனைகள் அதிகம். உள்நாட்டு பயணிகளுக்கு அந்தத் தலைவலிகள் இல்லை.

அடுத்து, நம்முடைய பிரிவைத் தேர்ந்தெடுத்து உள்ளே நுழைந்ததும், பாதுகாப்புச் சோதனை பிரிவில் எக்ஸ்ரே கருவிகள் எல்லாம் ஒரே இடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. கூடவே, எந்தெந்த விமான நிறுவனங்களுக்கு எங்கே பரிசோதனை நடக்கிறது என்ற விவரமும் எழுதப்பட்டிருக்கிறது.

பெட்டிகளைப் பரிசோதனை செய்துக் கொண்டு உள்ளே நுழைந்ததும், விமானத்தினுள் செல்வதற்கான அனுமதிச் சீட்டு வாங்கவேண்டும். இதற்கும் தனிக் கவுண்டர்கள் உண்டு. இவை அனைத்தும் ஒரே இடத்தில், வரிசையாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

அதாவது, நாம் ஜெட் ஏர்வேஸில் பயணம் செய்தாலும், இந்தியன் ஏர்லைன்ஸானாலும், அனுமதி சீட்டு வாங்குவதற்கு வெவ்வேறு இடங்களுக்குச் செல்லவேண்டியதில்லை. ஒரே இடத்திற்கு சென்று, நம்முடைய விமான நிறுவனத்தின் பெயர் எங்கே இருக்கிறது என்று தேடிக் கண்டுபிடித்தால் போதும். விமான நிலையம் முழுவதும் அலைந்து திரிந்து தேடுவதைவிட, இது சுலபமில்லையா!

தொடரும்...

## CATHODIC PROTECTION

